தமிழ்ச்சிட்டு

சிறுவர்
கலை இலக்கியத்
திங்களிதழ்

தென்மொழி
இணைப்பு
மீனம் (மார்ச்சு 2000)

குரல் : [illegible]
இசை : 3

முயற்சி

சிலந்தி வலையைப் பாருங்கள்!
சின்னஞ் சிறிய பூச்சியே!
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே!

தேனீக் கூட்டைப் பாருங்கள்!
திறமை யோடு ஒற்றுமை
பேணி, வீட்டைக் கட்டுமே!
பெரிய முயற்சி வேண்டுமே!

எறும்புப் புற்றைப் பாருங்கள்!
என்னைப் போன்ற எறும்புகள்
அருமை யான முயற்சியால்
அழகுப் புற்றைச் செய்தன!

குருவிக் கூட்டைப் பாருங்கள்!
குடுக்கை போன்று பின்னியே,
விரைவில் கட்டி முடிக்குமே!
வேண்டும் முயற்சி என்றுமே!

-1969

அறிவும் பயனும்

இரும்புத் துண்டு கிடந்தது;
எடுத்து வீசி எறிந்தனர்!
கருமான் ஒருவன் கண்டனன்;
காய்ச்சிக் கத்தி செய்தனன்!

எலும்புத் துண்டு கிடந்தது;
எடுத் தெறிந்து சென்றனர்!
எலும்புக் காரன் கண்டனன்;
எடுத்துப் பிடிகள் செய்தனன்!

தகரம் ஒன்று கிடந்தது;
தூக்கி வீசி எறிந்தனர்!
தகரக் காரன் கண்டனன்;
தகரக் குவளை செய்தனன்!

துரும்பும் நமக்குப் பயன்படும்!
தோன்றும் பொருள்கள் யாவுமே,
அறிவுள் ளார்க்குப் பயன்படும்!
அறிவில் லார்க்குப் பயனில்லை!

-1969

— பாவலரேறு பெருஞ்சித்திரனார் —

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

— பாவலரேறு

குரல் : 23, இசை : 3

தென்மொழி மீனம் 2031 (மார்ச்சு 2000) இதழின் இணைப்பு

நிறுவனர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை- 601 302.
தொலைபேசி எண் : 239 0231

நீ யாரைப் போன்றவன்?

தொலைக்காட்சித் தொடரில் வருகிற 'சத்திமான்' எனும் கதைத் தலைவனைப் போன்றே தானும் உடை உடுத்திக் கொள்வ தாகவும், தானும் பறப்பதாகவும் சொல்லி நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் மாடியிலிருந்து குதித்து இறந்த செய்திகளை நாம் அறிந்திருக்கிறோம்.

அதேபோன்று கையையும், காலையும் நீட்டிக்கொண்டு, தலைமயிரை ஒரு சிலுப்பு சிலுப்பிக்கொண்டு, தான் இரசினிகாந்து என்பதாகக் குழறிக் கொண்டு பேசுகிற பிள்ளைகள் பலரையும் நாம் பார்க்கிறோம்.

இந்த நிலையில் இக்காலத் தமிழகத்தின் இளந் தலைமுறைகள் இருப்பது எவ்வளவு வருந்தத்தக்கது.

பொய்மைக் காட்சிகளும், செயல்களும் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டிவிட முடியாது. அவை நம் அறிவை, உணர்வுகளைச் சூம்பச் செய்கின்றன.

ஆற்றலாய்ச் செழிப்பாய் வளரவேண்டிய நம் வாழ்வியலுக்கான அடித்தளங்கள் அறிவும் உழைப்பும்தாமே அல்லாமல் வேறன்று.

அறிவையும், உழைப்பையும் நாம் வளர்த்துக் கொள்ள உண்மை வாழ்க்கையில் அதுபோலும் வாழ்ந்தவர்களே நமக்கு முன்னோடிகளாக இருக்க முடியும்.

இரசினிகாந்து, சத்திமான்—போன்றவர்கள் திரைகளில் காட்சி ஓடிக் கொண்டிருக்கும் வரைதான் ஆடிக்கொண்டிருக்க முடியும்.

அவை நிறுத்தப்பட்டவுடன் — அவர்கள் இல்லாமல் போய்விடுவார்கள்.

அவர்கள் பறப்பதும், பத்து பேரை பந்தாடி அடிப்பதும் நடக்காதவை; பொய்மைக திரை வாழ்க்கையில் அல்லாமல் த வாழ்க்கையில் ஒரு திண்டின் மேலிருந்துகூட அவர்களால் கீழே குதித்துவிட முடியாது. ஒரிருவரிடம்கூடச் சண்டையிட முடியாது

எனவே, அத்தகைய பொய்மையர்கள் போன்று நாம் வளர, வாழ எண்ணுவது எவ்வளவு பெரிய அறியாமை.

தம்பி, தங்கைகளே — பணக்காரன், ஏழை என்றும், உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்றும் ஏற்றத்தாழ்வு புகுத்தப் பட்டிருக்கிற இந்த இழிவான குமுகத்தை மாற்ற எண்ணுவது தான் உண்மையும், அறிவுடைமையும் ஆகும்.

எனவே அத்தகைய முயற்சிகளில் பாடாற்றியவர்களே நம் வழிகாட்டிகளாக இருக்க முடியும். இன்னும் சொன்னால் அவர்களின் கருத்துகளையும், செயல்களையுமே நாம் வழிவிளக்குகளாய் ஏற்கவேண்டும்.

நாம் யாரைப் போன்றவர்களும் அல்லர். நாம் இத் தமிழ்க் குமுகத்துக்குச் சொந்தக்காரர்கள். ஆதலால் இக் குமுகத்தை மாற்றுகிற மக்களுள் நாமும் ஒருவர்.

எனவே, நம்மைப் போன்றவர்களாக மக்களையும் மக்களைப் போன்றவர்களாக நம்மையும் அமைத்துக் கொள்வதுதான் — நம்மை மட்டுமன்று, இக் குமுகத்தையும் மாற்றும்.

---

* ஏரிகள் நிறைந்த மாவட்டம் — செங்கல்பட்டு
* தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் — தஞ்சாவூர்
* பட்டாடைக்குச் சிறந்த ஊர் — காஞ்சிபுரம்
* பருத்தி ஆலை நிறைந்த நகரம் — கோயம்புத்தூர்
* தமிழ்நாட்டின் நீளமான ஆறு — காவிரி
* காவிரி உருவாகும் இடம் — குடகுமலை
  கடலில் கலக்கும் இடம் — பூம்புகார்.
* கல்லணை இருக்கும் மாவட்டம் — திருச்சிராப்பள்ளி
* திருவையாற்றுக்குப் பெயர்க் காரணம்
  காவிரி, வீரசோழன், குடமுருட்டி, வெண்ணாறு, வெட்டாறு ஆகிய ஐந்து ஆறுகளும் பாய்வதால்.
* கன்னியாகுமரியில் கூடும் முக்கடல்கள்
  குமரிப் பெருங்கடல், வங்கக் கடல், அரபிக் கடல்.

'தமிழ்ச்சிட்டு'
சலுகை விலையில் பழையபடிகள் — அரிய வாய்ப்பு

1967 முதல் 1995 வரை வெளிவந்த தமிழ்ச்சிட்டு இதழ்கள் (இடையில் இல்லாத இதழ்கள் தவிர்த்து) அனைத்தும் ஐந்து கட்டுகளாகக் கட்டப்பெற்று மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறது.

ஐந்து கட்டுகளும் உரு. 50.00 மட்டுமே. அஞ்சலில் பெற மேலும் உரு. 30.00 இணைத்து அனுப்பவும்.

திருடியவன் யார்?

-சித்திரச் செந்தாழை—

சிற்றூர் ஒன்றில், சிறிய மளிகைக் கடை வைத்து வாழ்வு நடத்தி வந்தான் ஒருவன். அவனிடம் உயர்வகையான இரண்டு நன்முத்துகள் இருந்தன. அந்த முத்துகள் அவனுடைய பாட்டனார் வைத்திருந்தவையாகும்.

அந்த மளிகைக் கடைக்காரன் சுற்றுச்செலவு(பயணம்) செல்ல விரும்பினான். அதனால் அந்த முத்துகளை அடுத்த வீட்டில் உறவினனிடம் கொடுத்து வைத்து, தான் திரும்பி வந்ததும், பெற்றுக் கொள்வதாகக் கூறினான்.

திரும்பிவந்த மளிகைக் கடைக்காரன், உறவினனிடம் தான் கொடுத்து வைத்திருந்த முத்துகள் இரண்டையும் திருப்பித் தருமாறு கேட்டான்.

உறவினன் கெடுநினைவோடு, "நீ என்னிடம் தரவும் இல்லை. நான் அவற்றைப் பார்த்ததும் இல்லை" என்று கூறினான்.

வழக்குமன்றத்துக்குப் போய் முறையிட்டான் மளிகைக் கடைக் காரன். வழக்குமன்றத் தலைவர் அந்த உறவினனைக் கூட்டி வரச்சொல்லி நெறிமன்றத் தலைவர் பிறகு அந்த உறவினனை வினவினார். அவனோ, "எனக்குத் தெரியவே தெரியாது" என்று கூறிக் கொண்டிருந்தான்.

சரியான சான்று இல்லை என்று கூறி வழக்கைத் தள்ளிவிட்டார் வழக்கு மன்றத் தலைவர். ஒரு மாதத்திற்குப் பிறகு, முத்துகளை இழந்த மளிகைக் கடைக்காரனை வரவழைத்து, அந்த முத்துகளின் எடை, அளவு, தன்மை ஆகியவற்றைத் தெரிந்து கொண்டார் வழக்குமன்றத் தலைவர்.

அந்த இரண்டு முத்துகளைப் போலவே, தொண்ணூற்று எட்டு முத்துகளை அரண்மனையிலிருந்து வரவழைத்தார்.

முத்துகளைக் களவாடிய உறவினனை வரவழைத்து, "நீ முத்து மாலை செய்வதில் திறமைசாலி என்பதைக் கேள்விப்பட்டேன். என்னிடம் உள்ள நூறு முத்துகளையும் எடுத்துக் கொண்டு போய், அழகான முத்து மாலை ஒன்று அணியம் செய்து கொண்டு வந்து கொடு" என்று கூறி, அவனிடம் முத்துகளைக் கொடுத்து அனுப்பினார்.

அவன் மிகுந்த ஊக்கத்தோடு முத்துகளைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். முத்துகளைக் கோக்கும் வேலையில் ஈடுபட்டான். ஆனால், 98 முத்துகளே இருந்தன. இரண்டு முத்துகளைக் காணாமல் பதறினான். தான் தவறி விட்டு விட்டதாக எண்ணினான்.

உடனே, மளிகைக் கடைக் காரனிடம் களவாடிய இரண்டு முத்துகள் இருப்பது நினைவிற்கு வந்தது. அந்த இரண்டையும் சேர்த்து முத்துமாலையை அணியம் செய்து வழக்குமன்றத் தலைவரிடம் கொண்டு சேர்த்தான். முத்துமாலையை வாங்கி அவர் எண்ணிப் பார்த்தார். அதில் நூறு முத்துகள் இருந்தன. மறுநாள், அவனை வழக்குமன்றத்திற்கு வரச் சொல்லி, புன்னகையோடு, "முத்து மாலை அணியம் செய்பவனே! நான் உன்னிடம் தந்தது 98 முத்துகள் தாமே! நீயோ 100 முத்துகளைக் கோத்திருக்கிறாய். சேர்க்கப்பட்ட 2 முத்துகள், சில நாட்களுக்கு முன், உன் உறவினனிடமிருந்து, நீ கைப்பற்றிக் கொண்டவை" என்று தீர்ப்புக் கூறினார். தான் செய்த தவற்றை அவன் ஒப்புக்கொண்டான். அதிலிலுள்ள 2 முத்துகளை எடுத்து, மளிகைக் கடைக்காரனிடம் சேர்ப்பித்து விட்டு, அந்த உறவினனுக்குத் தண்டனை வழங்கினார் வழக்குமன்றத் தலைவர். ◆

["மரியாதை இராமன் தீர்ப்புக் கதைகள்" என்ற கதைத் தொகுப்பிலிருந்து]

பால்வெளி மண்டலத்துள் நாம்...

எப்போது மாலைப் பொழுது வரும் என்று காத்துக் கொண்டிருந்தது போல் இளங்கோ, எழில், குழலி — எல்லாரும் நம்பி வீட்டுக்கு வந்து கூடிவிட்டனர்.

நம்பியின் தந்தைக்கு மிகவும் மகிழ்ச்சியாய்ப் போய்விட்டது.

"வான்வெளியைப் பற்றி நாம் பேசுவது உங்கள் எல்லாருக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறதா?" என்று கேட்டுக்கொண்டே வந்து அமர்ந்தார்.

"ஆமாம்...." — என்று எல்லாரும் ஒரே குரலில் கத்தினார்கள்.

"சரி..... நேற்று அந்த ஒளி ஆண்டைப் பற்றிப் பேசினோம் இல்லையா. இன்றைக்கு இந்தப் பால் வெளி மண்டலம் குறித்துப் பேசுவோம்.

நம் உலகம் தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கிறது என்பது நம் அனைவருக்கும் தெரியும். அதுபோலவே, நம் உலகம் கதிரவனையும் சுற்றிவருகிறதுதானே.

அதுபோலவே நம் ஞாயிற்று மண்டலமே அ்தாவது நம் கதிரவன் அதைச் சுற்றிவரும் கோள்கள் எல்லாம் சேர்ந்து இந்தப் பால்வெளி மண்டலத்துள் ஒரு நடு அச்சை வைத்துச் சுற்றி வருகின்றன.

அதுபோலும் ஒற்றை அச்சை வைத்துச் சுற்றி வருகிற அனைத்துக் கோள்களும் சேர்ந்ததைத்தான் ஒரு விண்மீன் மண்டலம் என்று நாம் குறிப்பிடுகின்றோம். அதாவது ஆங்கிலத்தில் 'கேலக்சி' — என்று குறிப்பிடுகின்றனர்.

அதுபோன்றதான ஒரு விண்மீன் மண்டலமே பால்வெளி மண்டலம்.

அந்தப் பால்வெளி மண்டலம் என்று நாம் இருக்கிற நம் விண்மீன் மண்டலத்துள் இலக்கக் கணக்கான கதிரவன்கள் உள்ளன.

அத்தகைய இலக்கம் கதிரவன்களில் ஒரு கதிரவன்தான் நம் கதிரவன்.

நம் கதிரவனை நடுவாக்கிப் பதினோரு கோள்களும், ஏறத்தாழ ஐம்பது துணைக் கோள்களும் சுற்றிக் கொண்டு வருவதுபோன்று, இந்தப் பால்வெளி மண்டலத்தில் உள்ள இலக்கம் கதிரவன்களையும் சுற்றிப் பல இலக்கக் கணக்கான கோள்களும், துணைக் கோள்களும் சுற்றிக் கொண்டுள்ளன.

எப்படிப் பார்த்தீர்களா?

நமக்கு மிகவும் அருகில் உள்ள நிலவுக்கு மாந்தர் போய் வந்ததையே வியப்பாக எண்ணுகிற நம்மால், இந்த அளவு விரிந்த நம் விண்மீன் மண்டலத்தை எண்ணி யாவது பார்க்க முடிகிறதா?

ஆக இத்தனையும் சேர்த்த நம் விண்மீன் மண்டலமான பால்வெளி மண்டலம் போலப் பல இலக்க மண்டலங்கள் இருப்பதாக வேறு சொல்லுகிறார்கள்...." — என்ற நம்பியின் தந்தை "என்ன குழலி விளங்குகிறதா?....." என்றவுடன்....

"ஐயோ.... எனக்குத் தலையே சுற்றுவது போல் இருக்கிறதுங்க ஐயா...." — என்றாள் குழலி.

*

முன்னெழுத்து.

— நுதல்

தணல்: அருவி என்ன உன் புத்தகத்தில் அ.த. அருவி என்று எழுதியிருக்கிறாய். அ.த. என்றால் என்ன ?

அருவி: ஏன் அப்படி கேட்கிறாய் ? என்னுடைய அம்மா, அப்பா இருவருடைய பெயர்களின் முதலெழுத்துகள்தாம் அவை.

தணல்: நீ, என்ன அப்படி வைத்துள்ளாய் ? எல்லோரும் அப்பா பெயரின் முதலெழுத்தை மட்டும்தானே முன்னெழுத்தாகக் கொள்கிறார்கள், நீ என்னவென்றால் இப்படி....

அருவி: முன்னெழுத்து என்பது எதற்கு ? நாம் இன்னாருடைய மக்கள் என்ற அடையாளத்துக்குத்தானே, அப்படியானால் நாம் அப்பாவுடைய மக்கள் மட்டும் இல்லைதாமே! அம்மா அப்பா இருவருடைய மக்களும்தாம் நாம். அப்படியிருக்க நாம் அப்பாவின் முதலெழுத்தை மட்டும் பயன்படுத்துவது தவறு இல்லையா ?

தணல்: நீ சொல்வது சரிதான். ஆனால் வழக்கத்திற்கு மாறாக இருக்கிறதே!

அருவி: எதை வழக்கம் என்கிறாய் ? முதலில் முன்னெழுத்து எழுதுவதே நம் வழக்கம் இல்லை தெரியுமா ? – அது ஆங்கிலேயர் வழக்கம். அந்த வழக்கத்தை நாம் மேற்கொண்டபின் நம் வாழ்வியலுக்கு உகந்த நிலையில் அதை அமைத்துக் கொள்வதுதானே சரி. அதற்காகத்தான் நம் குடும்ப வாழ்க்கையில் தாய் – தந்தை ஆகிய இருவரின் சிறப்பும் பெருமையும் கருதி இருவரின் முன்னெழுத்தையும் நாம் பயன்படுத்துதல் வேண்டும்.

தணல்: நீ சொல்வது சரிதான் அருவி. ஆனால் அதை நீ மட்டும் செய்தால் போதுமா ? மற்றவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டாமா ? மாற்றிக்கொள்வார்களா ?

அருவி: சரியான கருத்தை நாம் பின்பற்றுவோம். மற்றவர்களுக்கும் விளக்கமாய் எடுத்துச் சொல்வோம். என்ன தணல் சொல்கிறாய் ?

தணல்: சரி அருவி.... நீ சொல்வது சரிதான்.

சொல்லடை

4				3
		1		
5			7	
	2	6		

இடமிருந்து வலம்

1. ஒருவகை இலக்கியம்
2. குமரிக் கண்ட வரலாற்றை நிறுவியவர்

வலமிருந்து இடம்

2 முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன்.
3. தாய்க்கோழி இவற்றைக் கண்டால் எதிர்த்துத் துரத்தும்.

மேலிருந்து கீழ்

3. தமிழினத்தின் வழிகாட்டி.
4. மயிலுக்குப் போர்வை கொடுத்த அரசன் (3)
5. கரிய நிறமுடைய கோள்.

கீழிருந்து மேல்

2. கடைசி மூச்சுவரை மொழி, இன, நாட்டு விடுதலைக்காகவே வாழ்ந்தவர்.
6. பறக்கும் படை (4)
7. கொடையாளி.

(சொல்லடை விடை 12 ஆம் பக்கம்)

உங்கள் ஊரில் தமிழ்வழிப் பள்ளிக்கூடம் இல்லையா?

ஏன் நீங்களே தொடங்கக் கூடாது?

மேற்கொண்ட விளக்கங்களுக்கு தமிழ்வழிப் பள்ளிகள் நடத்திவரும் தமிழியக்கங்களுக்கு எழுதுங்கள்.

தமிழ்வழிக் கல்விக் கழகம்,
117, பெரியார் நகர்,
திருவான்மியூர்,
சென்னை - 600 041.

அவளும் என் அன்னை தானே!

— இறை. பொற்கொடி

இன்று, என்னை என் அம்மா வழக்கத்துக்கு மாறாக ஆறு மணிக்கே எழுப்பிட்டாள்.

இன்று நான் பள்ளிக்கூடத்தில் சேர வேண்டுமாம்.

சிறிது என்னுள்ளத்தில் அச்சமும் கவலையும் மாறிமாறி ஏற்பட்டன.

பள்ளிக்கூடம் எப்படி இருக்கும்?

நாள்தோறும் நம் அண்ணன் செல்கிறான்.

எப்படி அவன் அம்மாவை விட்டு விட்டுப் போகிறான்?

பள்ளிக்கூடம் விட்டு வந்தால் அவனை அம்மா,

''அதைப்படி! இதைஎழுது!'' என்று கூறுகிறாள்.

சில நேரங்களில் அண்ணன் என்னிடம் சேர்ந்து விளையாடினால் கூடத் திட்டுகிறாள்.

இப்படித்தான் என்னையும் அம்மா திட்டுவாளா?

அம்மா என்னைக் குளிப்பாட்டுகிறாள். தலை வாரி, முகமாவு பூசுகிறாள்.

என் அம்மாவை நான் தொட்டுப் பார்க்கிறேன்.

என் அம்மாவின்மீது எனக்கு ஆசை அதிகமாக வருகிறது.

அன்பாக உணவு ஊட்டுகிறாள்.

எனக்கு அழுகையாக வருகிறது.

என்னைத் தூக்கிக்கொண்டு செல்கிறாள்.

"கண்ணு! நீ நல்லாப் படிக்கணும். பெரியவனா ஆகி, நீ ஒரு மருத்துவனாக வர வேண்டும். உன் அப்பா, அம்மாவைக் காப்பாத்தணும். இந்த ஊர் மக்கள் எல்லாரும் உன்னைப் புகழணும்'' என்று கூறியவாறே, ஒவ்வொரு வரிக்கும் இரண்டு மூன்று முத்தங்களை வழங்கியவாறே, பள்ளிக்கூடத்தை அடைந்து விட்டாள்.

பள்ளிக்கூடத்தை நிமிர்ந்து பார்த்தேன்!

என்னுள் அச்சம். கவலை என் தொண்டை அடைத்தது.

பெரிய ஆசிரியையாம். அவள் என்னைப் பார்த்தாள்.

''அவனைக் கீழே இறக்கி விடுங்கம்மா!''

அம்மா என்னைக் கீழே இறக்கி விட்டாள்.

அம்மாவின் சேலைத் தலைப்பின் பின்னால் ஒளிந்தேன்.

"நீங்கள் போங்கள் அம்மா!"

அம்மா நகர்ந்தாள்!

அம்மா! அம்மா!

என் தாய் அழுதவாறே எட்டிப் பார்க்கிறாள்!

''என்னை விட்டுவிட்டுப் போகாதே அம்மா!''

அவள் வயிற்றில் என்னைச் சுமந்ததாக எத்தனை முறை கூறி இருக்கிறாள்!

இன்று எனக்கு அம்மாதானே பிடிக்கும்!

என்னிடம் எப்படி அன்பாக இருப்பாள்!

இப்போது எப்படி என்னை விட்டு விட்டுச் செல்கிறாள்!

வியப்பு! ஒரு ஏக்கம்!

என் பெருமூச்சு அடங்கும்முன்

அம்மா மாதிரியே ஒரு அணைப்பு!

யாரிவள்? என்னைத் தூக்கியவள் யார்?

நான் அவளைப் பார்க்கும் முன்பே அவள் என்னிடம் பேசினாள்.

"உன் பேர் என்ன?" நான் தான் உன் ஆசிரியை!

என்னை உனக்குப் பிடிக்கிறதா?

என்னை என் வகுப்புக்குக் கூட்டிச் செல்கிறாள்.

என் தேம்பல் எனக்கு ஆறுதலாக இருந்தது! அம்மா! எங்கே அம்மா போய் விட்டாள்!

ஏக்கம் என்னை வாட்டியது.

ஆசிரியர் கூறுவது கொஞ்சம் என் காதில் விழுகிறது!

"இங்க பாருங்கள் குழந்தைகளே! நம்ம வகுப்புக்கு, ஒரு புதிய மாணவன் வந்திருக்கிறான். அவனுக்கு, நீங்கள் இப்போது கைதட்டி வரவேற்புக் கொடுங்கள்!"

என்னைப் போன்ற மாணவர்கள் எல்லோரும் கைதட்டி வரவேற்கும் ஒலி என் காதில் விழுகிறது!

என்னைக் கீழே இறக்கிவிட்டாள் ஆசிரியை!

கீழே குனிந்த தலை, சிறிது கண் திறந்து, பார்த்து நிமிர

"இதோ உன் பலகை! இதோ மாக்கட்டி! உன் விருப்பப்படி படம் வரை பார்க்கலாம்"

ஒருமுறை அவளை நிமிர்ந்து நோக்கினேன்!

என் கண்களைத் துடைத்தாள்!

என் மூக்கை என் கைக் குட்டையால் துடைத்தாள்!

பிறகு ஒரு பாடலைச் சொல்கிறாள்!

ஆசிரியை:

"உன்னைக் கொண்டு வந்தே – இவ்
வுலகில் விட்டது யார்சொல்?"

மாணவர்கள்:

"அன்னை! அன்னை! அன்னை!
என் அன்னை! அன்னை!"

நான் அம்மாவை நினைக்கிறேன்!

என் நினைவு சிதறுகின்றது!

என் நினைவுக்குள் என் அம்மா மட்டும்தானே இருந்தாள்!

இன்னொரு உருவம் இடையில் வருகிறதே!

அது யார்? என் உள்ளத்தில் தேடுகின்றேன்!

அம்மாவிற்கு இணையாக ஒளிவீசும் இன்னொரு முகம்!

இவர்களும் என் அம்மாவா?!

என் அம்மா என்னைக் காப்பாற்றுகிறாள்.

இந்த அம்மா பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறாங்க!

அன்பாக இருக்கிறாங்க!

இவர்களும் அம்மாதானே!

'அறிவு' புகட்டும் இவர்களையும் அம்மா என்றே கூப்பிடலாமா?

அம்மா! அம்மா! மெல்ல மெல்ல அழைக்கிறேன்.

*

பிழைக்கு வருந்துகிறோம்.

சென்ற தமிழ்ச்சிட்டு(குரல். 23, இசை.2) இதழின் 3-ஆம் பக்க ஆசிரியவுரையில் 'வ'கரத்திற்குப் பகரமாகச் சில இடங்களில் 'ல'கரம் அச்சாகியுள்ளது. சிட்டுகள் திருத்திப்படித்திடக் கேட்டுக் கொள்கிறோம்.

யானை கண்ட குருடர்

— புலவர் இறைக்குருவனார்

ஆற்றங் கரையில் நின்றதோர்
ஆல மரத்து நிழலிலே
காற்று வாங்கி மகிழுவார்
கண்ணி லாத நான்கு பேர்!

கதைகள் பலவும் சொல்லுவார்
காரணங்கள் தேடுவார்
எதையும் பேசி யிருக்கையில்
எங்கோ சற்றுத் தொலைவிலே

அழகு யானைக் கழுத்தினில்
அசையும் மணியின் ஓசையைப்
பழகு செவியில் கேட்டனர்
பார்வை இல்லை என்செய்வார்?

இருகை தொட்டுத் தடவியே
யானை கண்டு தெளிவுறப்
பெருகும் ஆசை தீரவே
பேசி முடிவு கட்டினர்!

அருகில் வேழம் வந்ததும்
அணுகி னார்கள் பாகனை
உருகும் மொழிகள் பேசியே
உதவு மாறு வேண்டினர்!

மனம் இரங்கிப் பாகனும்
மாவிடத்துச் சொல்லினான்
இனம் அறிந்தந கைம்மலை
இணக்க மாக நின்றதே!

ஒருவன் காதை நீவியே
உம்பல் முறமே என்றனன்
பருவ யிற்றைத் தடவினோன்
பகடு பெரிய சாலென்றான்!

காலைத் தீண்டி நின்றவன்
களிறு நெடிய தூணென்றான்
வாலை யுருவிப் பார்த்தவன்
வாரு கோலே என்றனன்!

கண்ணி லாதார் நால்வரும்
கண்ட வாறு கூறினும்
திண்ண மாக யானையைத்
தெரிந்து கொள்ள வில்லையே!

உற்ற பொருளின் தன்மையை
உணர்ந்து கொள்ள விழைபவர்
முற்ற முழுதும் ஆய்ந்துதான்
முடிவு செய்ய வேண்டுமே! *

நம்சிறுவர்க்கு வழிகாட்டு

— பாவலர் இளஞ்சித்திரன் —

தமிழ்ச் சிட்டே! தமிழ்ச்சிட்டே!
தாவிப் பறந்து வாவாவா!
தமிழ்ப் பிள்ளை களுக்கெல்லாம்
தமிழை அள்ளித் தாதாதா!

அமிழ்தின் இனிய தன்னைமொழி;
அதுநம் தமிழாம் எடுத்துச்சொல்!
அமிழ்தே! உயிரே! எனப்போற்றும்
அதுநம் வாழ்வாம் எனப்புகட்டு!

நம்நா(டு) என்பது தமிழ்நாடு;
நாமதன் மக்கள் இசைபோடு!
நம்பேர் உலகில் "நாம்தமிழர்"
நம்சிறு வர்க்கு வழிகாட்டு!

சாதியைத் தொலைக்கக் கற்றுத்தா!
தமிழின அறிவுப் பாடம்தா!
ஓதிய பாவல ரேறவர்சொல்
ஒன்றா? இரண்டா? சொல்லித்தா!

அவரே நமக்கு வழித்துணைவன்!
அவரிந் நிலத்தின் ஒளிக்கதிரோன்!
அவரை ஒவ்வொரு வீட்டுள்ளும்
அழைத்துச் சென்று நீநிறுத்து!

சிட்டுக்கு வந்த மடல்கள்

✻ தென்மொழியின் இணைப்பாகத் தமிழ்ச்சிட்டைப் பறந்திடச் செய்த ஆசிரியர் மதிப்பிற்குரிய அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் கனிந்த நன்றி. தமிழ்ச்சிட்டுப் பறந்திட உதவி செய்த சான்றோர்கள் அனைவர்க்கும் என் நெஞ்சம் கனிந்த நன்றிகள்.

— மா. சந்திரமூர்த்தி,
வாழ்நாள் சிறையாளி,
பாளையங்கோட்டை நடுவண் சிறை

✻ நீண்ட காலத்திற்குப் பின் தமிழ்ச் சிட்டு இதழ் மீண்டும் வருவதை அறிந்து மகிழ்ச்சி அடைவதோடு, தங்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

— மா. செகந்நாதன், மகேந்திரபுரி.

✻ தமிழ்ச்சிட்டைப் படித்தேன். ஐயாவின் 'திருக்குறள் பாட்டைப் படித்தேன். மிகவும் அருமையாக இருந்தது. எழுத்துகளைக் கொண்டு படம் வரையக் கற்றுக் கொண்டேன். தமிழ்ச்சிட்டைத் தொடர்ந்து கொண்டு வாருங்கள்.

— த. தென்மொழி,
இரண்டாம் வகுப்பு, மத்தூர்.

✻ 'தமிழ்ச்சிட்டு' மீண்டும் சிறகடித்துப் பறப்பது கண்டு பேருவகை. ஒருவேளை உணவைக் குறைத்துக் கொண்டேனும் இதழை வாங்குவோம். ஆழ்ந்த பற்றுள்ளவர்கள் நிலையாக இருந்துவிட்டாலே சுமை குறையும்.

— செ. அருச்சுனன், திருச்சி - 14

✻ தமிழ்ச்சிட்டில் ஐயாவைப் பார்த்து மகிழ்கிறேன். அவரின் புன்சிரிப்பு அதில் தெரிகிறது. ஒளி மிகுந்த குறுகுறுத்த அவரின் பார்வையால் அது என்னை விழுங்குகின்றது.

— பாவலர் இளஞ்சித்திரன்,
சென்னை - 48

சொல்லடை: விடை

4 பே	று	ஹூ	ல்	வ 3
க	ரே	டை	ள	ள்
ன்	ல	1 ப	ள்	ளு
5 கா	வ	ன்	7 வ	வ
ரி	2 பா	6 வா	ண	ர்

உங்கள்பெயர் தமிழ்ப்பெயர்தானே?

உங்கள் பெயரைத் தமிழில்தானே வைத்துக் கொண்டுள்ளீர்கள்? இல்லையெனில் இன்றைக்கே தமிழில் மாற்றிக்கொள்ளுங்கள். பெயர் மாற்றத் தேவைக்கு எழுதுங்கள்.

தென்மொழி, சென்னை – 600 005